சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு 2012–2013 ஆம் ஆண்டிற்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குதல் – ரூ.4.42 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்ட (சஉதி.3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.109

நாள் 11–05–2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
சித்திரை மாதம் 29ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 அரசு ஆணை (நிலை) எண்.31, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள் 13.03.2012

2 சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.11107/சஉதி (தி.1) /2012 நாள் 18.04.2012

---------

ஆணை:–

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 2011 – 2012 ஆம் ஆண்டிற்கு பள்ளி சத்துணவு ...ங்களில் பயன்பெறும் 7367 மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டுக்கள் மற்றும் ...சில்வர் டம்ளர்கள் வழங்க ரூ.4.42 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. தற்போது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் கீழே ...ப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் சத்துணவு மையங்களில் உள்ள 7,367 பயனாளிகளுக்கு ... தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கிட ஒரு பயனாளிகளுக்கு ரூ.60/– ...வாண்டு ரூ.4.42 இலட்சம் ஒப்பளிப்பு கோரி சமூகநல இயக்குநர் அரசுக்கு கருத்துரு ...ளார்.

| வ.எண். | மாவட்டம் | தட்டு மற்றும் டம்ளர் வழங்க பரிந்துரைக்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | 1473 |
| 2 | அரியலூர் | 1473 |
| 3 | விருதுநகர் | 1475 |
| 4 | தூத்துக்குடி | 1473 |
| 5 | கிருஷ்ணகிரி | 1473 |
| | மொத்தம் | 7367 |

3. சமூகநல இயக்குநரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மேலே பத்தி 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 7,367 மாணவ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2236–சத்துணவு 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் –102 மதிய உணவு – I திட்டத்தில் சேராதது AX – புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமையல் பாத்திரங்களை மாற்றுதல் – 24 பொருள்களும் வழங்கலும்"
>
> (கு.தொ.கு2236–02–102–AX–2408)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 7,367 மாணவ, மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க தேவைப்படும் நிதியை தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பிரித்து அளிக்கவும், இத்திட்ட செயலாக்கத்தை கண்காணிக்கவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6. ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன் படி 2012 – 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி எவர்சில்வர் தட்டுக்கள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண்.23664/12/ நிதி துறை, நாள் 09.05.2012 ன் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அசோக் டோங்ரே
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை – 2.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர்
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.
சென்னை – 113.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர்
(கிழக்கு,தெற்கு,மற்றும் வடக்கு)
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை / கோவை



221

உதவி சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை – 3
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை – 6/9/18/35.

நகல்

நிதி (சந) துறை, சென்னை – 600 009 (2 நகல்கள்)
ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர்
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (ச.ந.7)த் துறை, சென்னை –9.
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை – 25.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

Under Secretary to Government
Social Welfare and Nutritious Meal
Programme Department
Secretariat, Chennai-600 009